**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - **641 003**

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: **94890 56730**

தொலைபேசி: **0422 - 6611302**
நிகரி: **0422 - 2431821**
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: **23.07.2025**
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்

## பட்டயப்படிப்பு மாணவர் சேர்க்கை 2025 – 2026

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்கப்படும் வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பொறியியல் பட்டயப்படிப்புகளுக்கு 2025–2026 ஆம் கல்வியாண்டிற்கு பெறப்பட்ட விண்ணப்பங்களில் 1878 பேர் தரவரிசைக்கு தகுதியானவர்களாக கருதப்பட்டனர். வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் வேளாண்மை பொறியியல் பட்டயப்படிப்புகளுக்கான இணையதள கலந்தாய்வு 23.07.2025 முதல் 28.07.2025 மாலை 5.00 மணிவரை (ஆறு நாட்கள்) நடைபெறுகிறது. இணையதள கலந்தாய்வு தொடர்பான விரிவான தகவல், தகுதியுள்ள அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் அவர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் மற்றும் அலைபேசி எண்ணுக்கும் குறுஞ்செய்தியாக அனுப்பப்பட்டுள்ளது.

விண்ணப்பதாரர்கள் http://tnau.ucanapply.com என்ற இணையதளத்தில் தங்களுடைய தரவுகளை பயன்படுத்தி அவர்களுடைய இணையதள பக்கத்தில் (dashboard) உள்நுழைந்து 23.07.2025 முதல் 28.07.2025 மாலை 5.00 மணிவரை (ஆறு நாட்கள்) தங்கள் கல்லூரி மற்றும் பாட விருப்பங்களை மாற்றிக்கொள்ளலாம். கடைசியாக உறுதி செய்யப்பட்ட மாணவர்களுடைய விருப்பங்கள், கல்லூரி மற்றும் பாடங்கள் இட ஒதுக்கீட்டிற்கு பரிசீலிக்கப்படும். இது குறித்த தெளிவான, படிப்படியான செயல்முறை, விண்ணப்பதாரர்களின் பதிவு செய்யப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

இணையதள கலந்தாய்வின் போது விண்ணப்பதாரர்கள் எந்த கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை. சான்றிதழ் சரிபார்ப்பின் போது விண்ணப்பதாரர்களிடமிருந்து கட்டணம் பெற்றுக்கொள்ளப்படும். அவ்வமயம், திரும்பப்பெறாத (Non–Refundable) கலந்தாய்வு கட்டணமாக ரூபாய்.200/– (பொதுபிரிவினர் (OC) / பிற்படுத்தப்பட்டோர் (BC) மற்றும் பிற்படுத்தப்பட்டோர் (இஸ்லாமியர்) (BCM (DNC)) / மிகவும் பிற்படுத்தப்பட்டோர் (MBC) மற்றும் சீர்மரபினர் (DNC) அல்லது ரூபாய்.100/– (ஆதிதிராவிடர் (SC) /ஆதிதிராவிடர் – அருந்ததியர் (SCA) மற்றும் பழங்குடியினர் (ST) மாணவர்கள்) செலுத்த வேண்டும். சேர்க்கை பெற்ற மாணவர்கள் அவர்களுடைய சேர்க்கையை உறுதி செய்யும் விதமாக இணையதளம் வாயிலாக ரூபாய்.5,000/– மட்டும் செலுத்த வேண்டும்.

**மேலும் விவரங்களுக்கு:**

| | |
|---|---|
| **(i)** | விண்ணப்பதாரர்கள் கலந்தாய்விற்கான வழிமுறைகள் http://tnau.ucanapply.com<br><br>என்ற இணையதள வாயிலாக தெரிந்துக் கொள்ளலாம். இதன் பொருட்டு ஏதேனும் விவரங்கள் தேவைப்பட்டால் 9488635077 மற்றும் 9486425076 என்ற அலைபேசி எண்களிலும் மின்னஞ்சல் (email): ugadmissions@tnau.ac.in மூலமாகவும் வாரநாட்களில் காலை 9.00 மணியிலிருந்து மாலை 5 மணிவரை தொடர்புகொள்ளலாம்,<br><br>மற்றும் |
| **(ii)** | விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய மாவட்டத்தில் உள்ள வேளாண் கல்லூரிகளையோ (Colleges) அல்லது வேளாண்மை ஆராய்ச்சி நிலையங்களையோ (Research Stations) அல்லது வேளாண்மை அறிவியல் நிலையங்களையோ (KVKs) தொடர்பு கொள்ளலாம். |

*மக்கள் தொடர்பு அலுவலர்*